[6th February 1959

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தப் பணம் செலவழிக்கப்பட்டுள்ளதா ? வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI. C. SUBRAMANIAM : எந்த இடத்தில் கட்டுவது என்று முடிவாகி தயாராகிக் கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் வேலை ஆரம்பமாகும்.

Minister's Pada Yatra

* 72 *Q*—SRI .A. GOVINDASAMY : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அமைச்சர்கள் பாத யாத்திரை சென்ற சமயத்தில் பிரயாணப்படி வாங்கினார்களா ?

(ஆ) அமைச்சர்கள் பாத யாத்திரை சென்ற சமயம் சர்க்கார் அதிகாரிகள் அவர்களுடன் வந்தார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The following Ministers undertook " Pada Yatra " in October 1958 :—

Minister (Finance).
Minister (Home).
Minister (Revenue).
Minister (Works).
They did not draw any travelling allowance.

(*b*) The District Welfare Officer and the Officials of the Public Works and Highways Departments accompanied the Minister for Works when the latter went on " Pada Yatra ". Government officials did not accompany the other Ministers when they went on " Pada Yatra ".

SRI A. GOVINDASAMY : பாத யாத்திரை போவதாக சொல்லிய ஒரு அமைச்சர் சென்னையிலிருந்து பூந்தமல்லி வரை காரில் சென்று அங்கிருந்து மாங்காடு வரை நடந்து அங்கு டிபன் சாப்பிட்டுவிட்டு, அங்கிருந்து குன்றத்தூருக்குச் சென்று சாப்பிட்டு விட்டு பின்னர் காரில் திரும்பி விட்டார் என்று சொல்கிறார்கள். இதுதான் பாத யாத்திரையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பாத யாத்திரை என்றால் நடப்பது. அவ்வளவுதான். கோவிந்தசாமி சொன்னதிலிருந்து, அவர் நடந்திருக்கிறார் என்று தெரிகிறது.

SRIMATHI KAMALAMBUJA AMMAL : பாத யாத்திரை என்றால் சென்னையிலிருந்து அவரது தொகுதி வரை நடந்து போகவேண்டுமென்பதா அங்கத்தினர் அபிப்பிராயம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பாதயாத்திரை எப்படி செய்ய வேண்டுமென்பதுபற்றி விதி ஒன்றும் கிடையாது. அவரவர்கள் உடம்பு சௌகரியப்படி செய்யலாம்.

' We Tamil ' Movement

* 73 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the agitation by the leaders of the ' We Tamil ' Movement to burn the map of India; and

6th February 1959]

(*b*) if so, whether any steps have been taken in the matter?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The Government are watching the situation closely and will take appropriate action as and when necessary.

SRI S. B. ADITYAN : May I know whether the Government have any proposal at present to bring in legislation to penalise the burning of the map of India less Tamilnad?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member should wait and see.

SRI A. A. RASHEED : Have the Government any information as to the real intention of the movement to burn the map of India?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not know whether even the sponsors of the movement are aware of their own intentions. (Laughter.) Therefore it is rather difficult to say.

SRI T. KARIA GOUNDER : நாம் ' தமிழர் இயக்கம் ' என்று எழுதியிருக்கிறது. இதில் யார் யார் சேர்ந்தவர்கள் என்று அமைச்சர் சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : யார் வேண்டுமானாலும் எந்த இயக்கத்தை வேண்டுமானாலும் ஆரம்பிப்பதற்கு நம் நாட்டில் சுதந்திரம் இருக்கிறது. ஆகவே " நாம் தமிழர் " என்று வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம். அல்லது " நாம் கன்னடர் " என்று வேண்டுமானாலும் கூட இங்கு ஆரம்பிக்க உரிமை இருக்கிறது.

Fire accidents

* 74 *Q*.—SRI K. B. S. MANI (on behalf of Sri M. C. Muthukumaraswamy) : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1954-55, 1955-56, 1956-57, 1957-58 (30—9—58 வரை) தஞ்சை ஜில்லாவில் நன்னிலம் தாலூகாவில் நடந்த தீ விபத்துக்கள் எத்தனை ?

(ஆ) மேற்படித் தீ விபத்துகள் ஒவ்வொன்றிலும் ஏற்பட்ட உத்தேச நஷ்டத் தொகை எவ்வளவு ?

(இ) மேற்படித் தீ விபத்துக்கள் ஒவ்வொன்றுக்காகவும் அரசாங்கம் அளித்த உதவித் தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The particulars are furnished in the form of a statement[a] which has been printed and placed on the table of the House.

Power looms

* 75 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of non-cotton yarn powerlooms in this State :

(*b*) the places where they are working;

---

[a] Printed as Appendix II on page 233 infra.